**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.R.சுஜாதா, B.Sc., L.L.M.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**2057 திருவள்ளுவர் ஆண்டு பரபாவ வருடம் சித்திரை திங்கள் 04 ம் நாள்**

**அ.வ.எண்.257/2022**

TNCB-13000326-2022

P. பெரியநாயகம் --- வாதி

/ எதிர் /

1) மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள், கோயமுத்தூர்

2) திரு. வட்டாட்சியர் அவர்கள், பொள்ளாச்சி .... பிரதிவாதிகள்

இவ்வழக்கனாது, கடந்த 28.06.2022 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 30.06.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 15.04.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. A.ஏகமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழுங்கும்...

**தீர்ப்புரை**

கடந்த 15.08.2001 தேதியில் இறந்து போன ஆறுச்சாமி த/பெ பழனிக்கவுண்டர் என்பவருக்கு இந்த வாதி மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசு என்று விளம்புகை பரிகாரம்

வழங்கிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII, விதி 1-ன்படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வழக்குரையின் சுருக்கம்**:

மேற்படி 2ம் பிரதிவாதி மீது வாரிசு சான்றுகோரி பிராது தாக்கல் செய்துள்ளார். வாதியின் இளைய மகன் P.ஆறுச்சாமி. த/பெ. பழனிக்கவுண்டர் கடந்த 15.08.2001ம் தேதியன்று கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், குரும்பபாளையம் கிராமத்தில் வைத்து இறந்துவிட்டார். இறந்து போன P.ஆறுச்சாமிக்கு வாதி மட்டுமே சட்டபூர்வமான வாரிசு ஆவார். இறந்து போன P.ஆறுச்சாமிக்கு தந்தையும், வாதி கணவருமான பழனிக்கவுண்டர் கடந்த 26.11.2011ம் தேதி இறந்துவிட்டார். இறந்து போன P. ஆறுச்சாமிக்கு திருமணம் ஆகவில்லை. வாதி அவருக்கு தாயார் ஆவார். வாதியைத் தவிர மேற்படியாருக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லை மேற்படி இறந்து போன P. ஆறுச்சாமிக்கு உடன்பிறந்த ஒரே சகோதரர் உள்ளார். இறந்து போன P. ஆறுச்சாமிக்கு சொத்துக்கள் பொள்ளாச்சி வட்டம் குரும்பபாளையம் கிராமத்தில் அமைந்துள்ளதால் மேற்படி சொத்துக்கு வாதி தான் சட்டப்படியான வாரிசு. வாதியைத் தவிர வேறு வாரிசுகள் இல்லை. மேற்படி சொத்துக்களில் பட்டா பெயர் மாற்றம் செய்யவும், சொத்து வரி பெயர் மாற்றம் செய்யவும் வாதிக்கு வாரிசு சான்று தேவைப்படுகிறது.

(2.2) வாதி இறந்து போன P. ஆறுச்சாமியின் வாரிசு சான்று கோரி 2ம் பிரதிவாதியிடம் விண்ணப்ப பதிவு எண் TN720220518694 இ-சேவை ஆன்லைன் மூலம் மனுக்கொடுத்தார். மேற்படி மனுவினை பரிசீலனை செய்த 2ம் பிரதிவாதி மேற்படி மனுவை கடந்த 18.05.2022ம் தேதியன்று Reject செய்து திருப்பி அனுப்பிவிட்டார். இவ்வழக்கில் வாதி பிரதிவாதி பேரில்

எவ்வித பரிகாரமும் கோரவில்லை. மேற்படி 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி உயரதிகாரி பிரதிவாதிகளை ஆக பெயரளவில் கட்சி சேர்த்து தாவா தாக்கல் செய்யப்படுகிறது. எனவே இறந்து போன P. ஆறுச்சாமிக்கு வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என விளம்புகை செய்யக் கோரி இவ்வழக்கினை தாக்கம் செய்துள்ளார்.

(2.3) ஆகையால் சமூகம் கோர்ட்டாரவர்கள் கிருபை செய்து. இறந்து போன P.ஆறுச்சாமி, த/பெ பழனிக்கவுண்டருக்கு வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என்று ஒரு விளம்புகை பரிகாரம் வழங்கியும் இன்னும் சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு தக்கதெனக் கருதும் இதர பரிகாரங்கள் வழங்கியும் தீர்ப்பாணையும் தீர்ப்புரையும் பிறப்பிக்க பிரார்த்திக்கிறார்.

3) <u>பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :

வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யும் மோசடியுமானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைத்தக்கது அல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளில் இந்த பிரதிவாதி வெளிப்படையாக ஏற்றுக் கொண்டவைகளைத் தவிர மற்றவற்றை இந்த பிரதிவாதி மறுக்கிறார். மறுக்கும் அந்த சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும்.

(3.2) வாதியின் இளையமகன் ஆறுச்சாமி என்பவர் திருமணம் ஆகமால் கடந்த 15.08.2001-ம் தேதியன்று இறந்து விட்டார் என்றும், மேற்படி ஆறுச்சாமியின் தந்தை பழனிக்கவுண்டர் கடந்த 26.11.2011 காலமாகி விட்டார் என்பதையும் வாதியே நிரூபிக்க வேண்டும். இறந்து போன ஆறுச்சாமியின் பெயரில் உள்ள சொத்துக்களை பெயர் மாற்றம் செய்ய 2-ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று கோரி இறந்து போன ஆறுச்சாமியின் வாரிசு

சான்றிதழ் கோரி 2 ம் பிரதிவாதியிடம் விண்ணப்பித்ததால், மேற்படி மனுவை பரிசீலனை செய்த 2 -ம் பிரதிவாதி மேற்படி ஆறுச்சாமி இறந்து 21 வருடங்களுக்கு மேல் ஆவதால் மனுவை நிராகரித்துள்ளார். நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ள குறிப்பானை கொடுத்துள்ளார். இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் தவறானது. இந்த பிரதிவாதி தேவைப்பட்டால் கூடுதல் பிரதிவாதம் தாக்கல் செய்யும் உரிமையை இதன் மூலம் ரிசர்வ் செய்து கொள்கின்றார். சமூகம் கோர்ட்டாரவர்கள் வாதி வழக்கினை இந்த பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் இந்த பிரதிவாதி பிரார்த்திக்கின்றார்.

4) **<u>வழக்கெழுவினாக்கள்</u>** :

வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை சங்கதிகளின் அடிப்படையில் இரு தரப்பும் கேட்கப்பட்டு, இவ்வழக்கின் தீர்விற்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. | Whether the plaintiffs are the only legal heirs of the deceased Arusamy ? |
| 2 | Whether the plaintiffs is entitled to the relief of declaration ? |
| 2. | To what other relief? |

5) **<u>சாட்சிகள்</u>** :

வாதி தரப்பில், வாதி பெரியநாயகம் தன்னை **வா.சா.1** ஆக விசாரித்துக்கொண்டு **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3 ம் நபர் மாரியம்மாள் வாதி தரப்பில் **வா.சா.2** ஆக விசாரித்துக்கொண்ட **வா.சா.ஆ.4** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி ஆவண சாட்சியங்கள் இல்லை.

**6) எழுவினா 1-2 ற்கான தீர்வு:**

ஆறுச்சாமி இறப்பிற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதை வாதி நிரூபித்துள்ளார்களா என்று காண்கையில் மேற்படி ஆறுச்சாமி அவர்கள் கடந்த 15.08.2001 தேதியன்று கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், குரும்பபாளையம் கிராமத்தில் வைத்து காலமாகிவிட்டார் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.2** பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது. மேற்படி இறந்துபோன ஆறுச்சாமியின் தந்தை பழனிகவுண்டர் கடந்த 26.11.2011 ம் தேதியில் காலமாகிவிட்டார் என்பது வாதி மற்றும் வா.சா.2 மாரியம்மாள் சாட்சியத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சங்கதி குறித்து பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் குறுக்குவிசாரணையின் போது எழுப்பாததில் இருந்து பழனிகவுண்டர் கடந்த 26.11.2011 ம் தேதியன்று இறந்துவிட்டார் என்பது வாதி தரப்பு சாட்சியத்தில் இருந்து உறுதியாகிறது.

(6.2) மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலிக்கையில் மேற்படி இறந்துபோன ஆறுச்சாமியின் வாதி பெரியநாயகம் மற்றும் பழனிகவுண்டரின் மகன் என்பது உறுதியாகிறது. எனவே இந்த வாதி மட்டுமே இறந்தபோன ஆறுச்சாமிக்கு சட்டபடியான வாரிசு என்பது உறுதியாகிறது. மேலும் இறந்துபோன ஆறுச்சாமியின் பெயரில் உள்ள சொத்துக்களை பெயர் மாற்றம் செய்வதற்காக 1ம் பிரதிவாதியிடம் வாரிசு சான்று வேண்டி இந்த வாதி மனு செய்த போது மேற்படி ஆறுச்சாமி இறந்து 21 வருடங்கள் ஆவதால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி மனு திருப்பப்பட்டுள்ளது என்பது வா.சா-ஆ-2 ஆவணத்தில் இருந்து உறுதியாகிறது-

(6.3) மேற்படி பிரதிவாதிகள் இந்த வாதிகள் இறந்துபோன ஆறுச்சாமிக்கு வாரிசு இல்லை என்று உத்தரவு பிறப்பிக்காததில் இருந்தே இந்த வாதி தான் இறந்துபோன ஆறுச்சாமிக்கு சட்டபடியான வாரிசு என்பது உறுதியாகிறது- வாதி தரப்பை உறுதி செய்யும் விதமாக வா.சா 2 சாட்சி ஆக விசாரிக்கப்பட்டு அவர் மேற்படி சங்கதிகளை உறுதிபடுத்தி சாட்சியமளித்துள்ளார். மேற்படி வாதியை தவிர இறந்துபோன ஆறுச்சாமிக்கு வேறு வாரிசு இல்லை என்பது வாதி தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களில் இருந்து உறுதியாகிறது.

(6.4) மேலும் இந்த வாதி இறந்துபோன ஆறுச்சாமிக்கு வாரிசு இல்லை என்று இந்த பிரதிவாதிகள் எவ்வித ஆட்சேபணையும் செய்யாமல் வாரிசுகளை இனம் காண முடியவில்லை என்று கூறி குறிப்பாணை வழங்கியதில் இருந்தே வாதி தான் இறந்துபோன ஆறுச்சாமிக்கு வாரிசு என்பது உறுதியாகிறது என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்கண்ட எழுவினாக்களுக்கு வாதிஆதரவாக தீர்வு காண்கிறது.

**7) <u>எழுவினா 3 ற்கான தீர்வு</u>:**

மேற்கண்ட எழுவினாவிற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளதால் வேறெந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது-

**<u>முடிவில்,</u> கடந்த 15.08.2001 தேதியில் இறந்து போன ஆறுச்சாமி த/பெ பழனிக்கவுண்டர் என்பவருக்கு இந்த வாதி மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் செய்து வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில், என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAMACHANDRAN SUJATHA
Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.04.18 01:11:50 +0930

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

**வாதிகள் தரப்பு சாட்சி** :

வா.சா.1. பெரியநாயகம் ( வாதி)

வா.சா.2 மாரியம்மாள் (3 ம் நபர்)

**வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்** :

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.08.2001 | ஆறுச்சாமியின் இறப்பு சான்றிதழ் - அசல் |
| வா.சா.ஆ.2 | 18.05.2022 | 2 ம் பிரதிவாதி வழங்கிய இ. சேவை Reject செய்த குறிப்பாணை - அசல் |
| வா.சா.ஆ.3 | | வாதி பெயரிலுள்ள ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது - நகல் |
| வா.சா.ஆ.4 | | மாரியம்மாள் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது - ஒளி நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்** :

– **இல்லை** -

RAMACHANDRAN SUJATHA
Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.04.18 01:11:56 +0930

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

----------------------------------------------------------------------------

**<u>அசல் / வரைவு தீர்ப்புரை</u>**

அ.வ.எண்.257/2022

**நாள்** : 17.04.2026

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**பொள்ளாச்சி.**

----------------------------------------------------------------------------